A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 57 / 2023**

திரு ராதாகிருஷ்ணன்,
த/பெ. ராஜகோபால் கவுண்டர்,
கடுங்காளகுப்பம் கிராமம், வ.புதூர் அஞ்சல்,
கம்மவான்பேட்டை வழி, ஆற்காடு தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம் – 632 319.

………மேல்முறையீட்டாளர்
(திரு ராதாகிருஷ்ணன்)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/ வேலூர்,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு மெயின் ரோடு, TNEB,
காந்தி ரோடு, வேலூர் – 632 006.

. . . எதிர்மனுதாரர்
(திரு S. ஆரோக்கிய அற்புதராஜ், செயற்பொறியாளர்/ இ&ப/ வேலூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 07-08-2023**

**கேட்புரை நாள்: 11-10-2023**

**ஆணை நாள்: 17-10-2023**

07.08.2023 அன்று பெறப்பட்ட திரு ராதாகிருஷ்ணன், த/பெ. ராஜகோபால் கவுண்டர், கடுங்காளகுப்பம் கிராமம், வ.புதூர் அஞ்சல், கம்மவான்பேட்டை வழி, ஆற்காடு தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் – 632 319 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 57/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 11.10.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள்

ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

சர்வே எண் 186/2–இல் விண்ணப்பித்த மின் இணைப்பை சர்வே எண் 186/4–இல் உள்ள கிணற்றுக்கு இடமாற்றி மின் இணைப்பு தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 சர்வே எண் 186/2–இல் விண்ணப்பித்த மின் இணைப்பை சர்வே எண் 186/4–க்கு இடமாற்றி மின் இணைப்பு தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டதில் நில அளவை எண் 186/2 கொண்ட நிலத்தில் ஏற்கனவே இரண்டு விவசாய மின் இணைப்புகள் இருப்பதும் அதில் ஒரு விவசாய மின் இணைப்பு மேல்முறையீட்டாளர் பெயரில் இயங்கி வருவதும் தெரியவந்ததால் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு விதிப்படி ஏற்கனவே மேல்முறையீட்டாளரின் பெயரில் விவசாய மின் இணைப்பு உள்ளதால் மற்றொரு மின் இணைப்பு வழங்கி இடமாற்றம் செய்ய இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் வேலூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 25.05.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், வேலூர் மின் பகிர்மான வட்டம் 07.07.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **<u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 வேலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 07.07.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *On perusal of both side documents submitted before this forum and oral arguments by both sides, finally this forum comes to conclusion that there is no merits on the petition given by the petitioner. Hence, the petition has been disposed thereof."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 11.10.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு ராதாகிருஷ்ணன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு S. ஆரோக்கிய அற்புதராஜ், செயற்பொறியாளர்/ இ&ப/ வேலூர், வேலூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் தான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருவதாகவும், தன் சின்ன தாத்தா மகன் விநாயகத்திடமிருந்து நிலம் கிரையம் பெற்றதாகவும், தன் சித்தப்பா

ஆகிய விநாயகம் சர்வே எண் 186/2–க்கு மின் இணைப்பு வேண்டி 06.04.2004 அன்று விண்ணப்பம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும், 186/2 என்ற சர்வே எண்ணில் உள்ள கிணற்றில் ஏற்கனவே தன் பெயரில் மின் இணைப்பு எண் 231–011–160 உள்ளதாகவும், தன்னுடைய 186/4 என்கிற மற்றொரு சர்வே எண்ணில் போர் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தன் சித்தப்பா விநாயகம் அவர்கள் சர்வே எண் 186/2–க்கு மின் இணைப்பு வேண்டி 06.04.2004 அன்று விண்ணப்பம் செய்துள்ளதாகவும், தற்பொழுது அந்த சர்வே எண் உள்ள நிலம் தனக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில், விவசாய மின்னிணைப்பிற்கான சர்வே எண்ணை 186/2–லிருந்து மாற்றி தனக்கு சொந்தமான 186/4 சர்வே எண்ணிற்கு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திரு விநாயகம், த/பெ. அண்ணாமலை, கருங்காலி குப்பம் கிராமம் அவர்கள் வரகூர் வருவாய் கிராம புல எண் 1852 இல் உள்ள கிணற்றில், தனக்குன்டான பாகத்திற்கு விவசாய மின் இணைப்பு கோரி விண்ணப்பித்து அவ்விண்ணப்பம் கோட்ட முன்னுரிமை எண் 3076/2004 ஆக கடந்த 06.04.2004 இல் பதிவுசெய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இவ்விண்ணப்பத்திற்கு செயற்பொறியாளர்/இயக்குதலும் பராமரித்தலும்/வேலூர் கோட்டம் அலுவலகத்திலிருந்து திரு விநாயகம், த/பெ. அண்ணாமலை, கருங்காலி குப்பம் கிராமம், வரகூர் அஞ்சல் அவர்களுக்கு தயார்நிலை பதிவு செய்ய வேண்டி 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் கடித எண் செ.பொ இதப்/ வேலூர்/ 30 நாட்கள் அறிவிப்பு கடிதம்/ அ எண்.016/ 2021–22 நாள் 13:10:2021 வாயிலாக பதிவஞ்சலில் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் முகவரியாளர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்று பதிவஞ்சல் திரும்ப பெறப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 R. ராதாகிருஷ்ணன் த/பெ. இராஜ்கோபால் கவுண்டர் அவர்கள் மேற்குறிப்பிட்ட வரகூர் வருவாய் கிராம நில அளவை எண் 186/2 நிலத்தினை திரு விநாயகம் த/பெ. அண்ணாமலை அவர்களிடமிருந்து 19.02.2007 நாளிட்ட 209/2007 எண்ணுள்ள

விற்பனை ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெற்று அந்த நிலத்தில் ஏற்கனவே அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றுக்கு விவசாய மின்இணைப்பு விண்ணப்பம் எண்.3076/2004-னை தன் பெயருக்கு மாற்ற கோரி விற்பணை ஆவணம் மற்றும் கணினி சிட்டா ஆகியவற்றை அளித்திட்டதால் அவ்விண்ணப்பம் கீழ்பள்ளிப்பட்டு உதவி பொறியாளர் மற்றும் சாத்துமதுரை உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் பரிந்துறை செய்யப்பட்டு செயற்பொறியாளர்/வேலூர் கோட்டம் அவர்களால் விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் எண் 3076/ 2004 திரு விநாயகம் த/பெ. அண்ணாமலை பெயரிலிருந்து திரு R. ராதாகிருஷ்ணன். த/பெ.இராஜகோபால் கவுண்டர் பெயருக்கு Memo No. EE/O&M/VLR/TA-2/F.AGL Name Transfer/D. 72/2021-22, dt. 24.01.22 வாயிலாக பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதனை தொடர்ந்து தயார்நிலை பதிவு செய்ய 29.01.2022 அன்று களஆய்வு மேற்கொண்டதில் மேற்படி நில அளவை எண் 186/2 கொண்ட நிலம் மற்றும் அதில் உள்ள கிணறு திரு R. ராதாகிருஷ்ணன், த/பெ. இராஜகோபால் கவுண்டர் அவர்களுக்கும் திரு. மணி த/பெ. மாணிக்க கவுண்டர் அவர்களுக்கும் மட்டுமே சொந்தமானது என்பதும் வருவாய் ஆவணங்களின் படி மேற்படி இருவருக்கு மட்டுமே உரிமையானது என தெளிவாகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் நில அளவை எண் 186/2 கொண்ட நிலத்தில் ஏற்கனவே இரண்டு விவசாய மின் இணைப்புகள் இருப்பதும் அதில் ஒரு விவசாய மின் இணைப்பு எண் 231-011-160 மேல்முறையீட்டாளரான திரு இராதாகிருஷ்ணன், த/பெ. இராஜகோபால் கவுண்டர் பெயரில் இயங்கி வருவதும் மற்றொரு விவசாய மின் இணைப்பு எண் 231-011-171, திரு மணி அவர்களின் பெயரில் இயங்கி வருவதும் கள ஆய்வில் தெரிய வந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு விதி 27 (13)இல் "ஒரே கதவிலக்கத்துக்கு அல்லது துணைக் கதவிலக்கத்துக்கு அல்லது தனி ஒருவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மின்னிணைப்புகள் தரப்பட முடியாது" என உள்ளதாலும் இயக்குநர்/பகிர்மானம் அவர்களின் குறிப்பானை எண் D(D)/CE/Plg & RC/SE/RE&ID/EE/RE/A1/F. TARGET 21-22/D.651/21, Dt. 18.12.2021-இல் "If the applicant

has already availed senice connection to the well for which now the application is released then for such cases change of well/bore well location should not be considered and the application has to be cancelled as per TNERC directive and this office Instruction dated 20.11.2021" என அறிவுறுத்தப்பட்டிருப்பதாலும் வரகூர் வருவாய் கிராம புல எண் 186/2 இல் உள்ள கிணற்றில் மேல்முறையீட்டாளர் திரு இராதாகிருஷ்ணன். த/பெ. இராஜகோபால் கவுண்டர் அவர்களுக்கு ஏற்கனவே விவசாய மின்இணைப்பு எண். 231-011-160 உள்ளதால் மற்றொரு விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது என்பதாலும் புல எண் 186/2 இல் உள்ள கிணற்றுக்கு பதிவு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் 3076/2004 இரத்து செய்ய கீழ்பள்ளிப்பட்டு உதவி பொறியாளர் மற்றும் சாத்துமதுரை உதவி செயற்பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டு செயற்பொறியாளர்/வேலூர் கோட்டம் அவர்களால் 10-02-2022 அன்று இரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேல்முறையீட்டாளர் திரு இராதாகிருஷ்ணன் அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், வேலூரில் அளித்திட்ட முறையீட்டு மனு பதிவு எண் 03/2023-24, நாள் 30.05.2023 ஆக பதிவு செய்யப்பட்டு அதன்பேரில் 07.07.2023 அன்று இருதரப்பு வாதுரையை கேட்டு வரகூர் வருவாய் கிராம புல எண் 186/2 இல் மேல்முறையீட்டாளர் திரு இராதாகிருஷ்ணன், த/பெ. இராஜகோபால் கவுண்டர் அவர்கள் பெயரில் ஏற்கனவே விவசாய மின் இணைப்பு இயங்கி வருவதால் வரகூர் வருவாய் கிராம புல எண் 186/2-க்கு பதிவு செய்திட்ட விவசாயமின் இணைப்பு கோரும் விண்ணபத்தின் முன்னுரிமையை, மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான வரகூர் வருவாய் கிராம வேறு புல எண் 186/4-க்கு மாற்றம் செய்ய இயலாது என வேலூர் மின் பகிர்மான வட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் மேல்முறையீட்டாளர் திரு இராதாகிருஷ்ணன், த/பெ. இராஜகோபால் கவுண்டர் அவர்களின் முறையீட்டு எண் 03/2023-24 ஐ தள்ளுபடி செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான 186/2 என்ற சர்வே எண்ணில் உள்ள கிணற்றில் ஏற்கனவே தன் பெயரில் மின் இணைப்பு எண் 231-011-160 உள்ளதாகவும், தன்னுடைய 186/4 என்கிற மற்றொரு சர்வே எண்ணில் போர் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தன் சித்தப்பா விநாயகம் அவர்கள் சர்வே எண் 186/2-க்கு மின் இணைப்பு வேண்டி 06.04.2004 அன்று விண்ணப்பம் செய்துள்ளதாகவும், தற்பொழுது அந்த சர்வே எண் உள்ள நிலம் தனக்கு பாத்தியப்பட்டுள்ள நிலையில், விவசாய மின்னிணைப்பிற்கான சர்வே எண்ணை 186/2-லிருந்து மாற்றி தனக்கு சொந்தமான 186/4 சர்வே எண்ணிற்கு வழங்குமாறு தன்னுடைய வாதுரையில் தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் திரு விநாயகம் அவர்கள் புல எண் 186/2-இல் உள்ள கிணற்றில் தனக்கு உண்டான பாகத்திற்கு விவசாய மின் இணைப்பு கோரி விண்ணபித்ததாகவும் அவ்விண்ணப்பம் கோட்ட முன்னுரிமை எண் 3076/2004 ஆக 06.04.2004-இல் பதியப்பட்டதாகவும், அவ்விண்ணப்பத்திற்கு தயார் நிலை பதிவு செய்ய வேண்டி 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் எண் 16/2021-22 நாள் 13.10.2021 பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டதாகவும், ஆனால் முகவரியாளர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என்று பதிவு அஞ்சல் திரும்ப பெறப்பட்டதாகவும், நேரிடையாக விசாரணை செய்ததில் திரு விநாயகம் அவர்கள் அந்த விசாலசத்தில் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

7.4 இந்நிலையில், 24.01.2022 அன்று மேல்முறையீட்டாளர் மேற்குறிப்பிட்ட நில அளவை எண் 186/2 நிலத்தினை திரு விநாயகம் அவர்களிடமிருந்து 19.02.2007 நாளிட்ட 209/2007 எண்ணுள்ள விற்பனை ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெற்று அந்த நிலத்தில் ஏற்கனவே அமைந்துள்ள திறந்தவெளி கிணற்றுக்கு திரு விநாயகம் அவர்கள் விண்ணபித்திருந்த விவசாய மின் இணைப்பு எண் 3076/2004-ஐ தன் பெயருக்கு மாற்றக் கோரி உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து திரு விநாயகம் பெயரிலிருந்து திரு ராதகிருஷ்ணன் பெயருக்கு பெயர்மாற்றம் செய்துள்ளார்.

7.5 அதனை தொடர்ந்து தயார்நிலை பதிவு செய்ய 29.01.2022 அன்று கள ஆய்வு மேற்கொண்டதில் மேற்படி நிலஅளவை எண் 186/2 கொண்ட நிலம் மற்றும் அதிலுள்ள கிணறு மேல்முறையீட்டாளர் மற்றும் திரு மணி என்பவருக்கு மட்டுமே சொந்தம்

என்பதும் மேலும் நில அளவை எண் 186/2 கொண்ட நிலத்தில் ஏற்கனவே இரண்டு விவசாய மின் இணைப்புகள் இருப்பதும் அதில் ஒரு விவசாய மின் இணைப்பு எண் 231–011–160 மேல்முறையீட்டாளரான திரு இராதாகிருஷ்ணன் பெயரில் இயங்கி வருவதும் மற்றொரு விவசாய மின் இணைப்பு எண் 231–011–171, திரு மணி அவர்களின் பெயரில் இயங்கி வருவதும் கள ஆய்வில் தெரியவந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 கள ஆய்வின்படி ஏற்கனவே நில அளவை எண் 186/2–இல் உள்ள கிணற்றில் மேல்முறையீட்டாளரின் பெயரில் ஒரு மின் இணைப்பு எண் 231–011–160 உள்ள நிலையில் தற்சமயம் விவசாய மின் இணைப்பிற்கான விண்ணப்ப எண் 3076/2004–ஐ ஏற்று மற்றொரு மின் இணைப்பு மேல்முறையீட்டாளரின் பெயரிலேயே வழங்க இயலாது என்பதால் புல எண் 186/2–இல் உள்ள கிணற்றுக்கு பதிவு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் 3076/2004 நாள் 10.02.2022 அன்று ரத்து செய்யப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கண்ட பத்திகளில் உள்ள வாதங்கள் மற்றும் கொடுக்கப்பட்ட ஆவணங்களின் மூலம் அறியவருவது, மேல்முறையீட்டாளருக்கு புல எண்.186/1–ல் ஒரு ஏக்கர் பாசன நிலமும், 186/2–ல் உள்ள கிணற்றில் 1/3 பாகமும், அக்கிணற்றில் 1990–ல் திரு.கோவிந்தசாமி கவுண்டர் அவர்களால் பெறப்பட்ட மின்னிணைப்பு எண்.231–011–160–ம் வாரிசு அடிப்படையில் சொந்தமாகியுள்ளது. அதன்பிறகு திரு அண்ணாமலை கவுண்டர் மகன் விநாயகம் அவர்களிடமிருந்து புல எண்.186/4–ல் அமைந்துள்ள ஒரு ஏக்கர் நிலம் மற்றும் 186/2–ல் உள்ள கிணற்றில் 1/3 பாக உரிமையையும் 2007–ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளார். அதன் மூலம் மேல்முறையீட்டாளருக்கு 186/2–ல் உள்ள கிணற்றில் 2/3 பாகம் உரிமை உள்ளதாக அறியப்படுகிறது.

7.8 மேல்முறையீட்டாளர் கிரையம் பெறுவதற்கு முன்பு திரு விநாயகம் அவர்கள் தன்னுடைய விளைநிலத்திற்கு 06.04.2004 அன்று புல எண்.186/2–ல் உள்ள கிணற்றில் உள்ள அவரின் 1/3 பாக உரிமையின்படி விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்துள்ளார். மேற்படி புல எண்.186/4–ல் அமைந்துள்ள நிலம் மற்றும் புல எண்.186/2–ல் உள்ள கிணற்றின் 1/3 பாக உரிமையை 19.02.2007 அன்று

மேல்முறையீட்டாளர் கிரையம் பெற்றதின் அடிப்படையில் திரு.விநாயகம் அவர்கள் பதிவு செய்த விவசாய விண்ணப்பத்தை மேல்முறையீட்டாளர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மின் இணைப்பு கேட்டு பதிவு செய்யப்பட்ட விவசாய கிணறு 186/2 என்ற சர்வே எண்ணில் தற்சமயம் மேல்முறையீட்டாளரான திரு ராதகிருஷ்ணன் பெயரில் ஒரு மின் இணைப்பு எண் 231–011–160–ம் மற்றொரு கூட்டுதாரரான திரு. மணி என்பவர் பெயரிலும் 231–011–171 என்ற மின் இணைப்பு இருப்பதும் தெரியவருகிறது.

7.8 மேலும் திரு ராதகிருஷ்ணன் திரு விநாயகம் அவர்களிடமிருந்து விவசாய நிலத்தை 2007–இல் பெற்றுக் கொண்ட நிலையில் எந்தவிதமான பெயர் மாற்றமும் அக்காலகட்டத்தில் செய்யவில்லை. விண்ணப்பத்திற்கு தயார் நிலை பதிவு செய்ய வேண்டி 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்ட 13.10.2021 –ற்கு பிறகுதான் 24.01.22 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு தயார்நிலை பதிவு செய்ய 29.01.2022 அன்று கள ஆய்வு மேற்கொண்ட பொழுதுதான் நிலஅளவை எண் 186/2–ல் அமைந்துள்ள கிணற்றில் மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே ஒரு மின்னிணைப்பு இயங்கிவந்தது தெரியவந்துள்ளது. எதிர்மனுதாரர் பெயர் மாற்றம் செய்த விண்ணப்பத்தை கள ஆய்வு செய்யாமலே உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் பரிந்துரையில் அடிப்படையில் வழங்கியதாக கேட்புரையில் தெரிவித்தார். இந்த நிலவிற்பனை சம்பந்தமாக திரு விநாயகம் அவர்களிடமிருந்து திரு ராதகிருஷ்ணன் பெயருக்கு மாற்றம் நடந்த நிலையில் கள ஆய்வு செய்திருந்தால் மேல்முறையீட்டாளர் பெயரில் ஏற்கனவே மின் இணைப்பு இருக்கும் நிலை குறித்து தெரிந்திருக்கும்.

7.9 மேலும் கேட்புரையின்போது புல எண். 186/4 சம்பந்தமாக கூடுதல் விவரங்கள் மற்றும் ஆவணங்கள் கோரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர் 19.02.2007 அன்று பதிவு செய்யப்பட்ட புல எண். 186/4 சம்பந்தப்பட்ட சொத்து விற்பனை ஆவணம், பட்டா எண்.1632–ன் நகல், கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ், புல வரைபட நகல், சொத்துவரி நகல், சிட்டா, அடங்கல் விவரக் குறிப்பு மற்றும் புல எண்.186/4–ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு 13.07.2023 அன்று புதிய விவசாய மின்னிணைப்பு கோரிய மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் ஆகியவற்றை சமர்பித்துள்ளார். சம்பந்தப்பட்ட

சொத்து விற்பனை ஆவணத்தை ஆராயும்போது மேல்முறையீட்டாளர் திரு.விநாயத்தின் வாரிசுதாரர்களிடமிருந்துதான் மேற்படி புல எண்.186/4–ஐ கிரையம் பெற்றுள்ளார். அதில் கண்டுள்ள சொத்து விவரத்தின்படி புல எண்.186/4–ல் அமைந்துள்ள 0.96 சென்ட் நிலம் மற்றும் புல எண்.186/2–ல் அமைந்துள்ள 0.07 சென்ட் அளவுள்ள நிலத்தில் அமைந்துள்ள கிணர், கிணர்மேடு மற்றும் கிணறு அடிநிலம் ஆகியவற்றில் பொதுவில் 3–ல் 1 பாகம் மேல்முறையீட்டாளருக்கு சொந்தம் என அறியவருகிறது. மேலும் மேற்கண்ட நிலம் விற்பணை செய்யப்பட்டபோது அந்நிலத்தில் ஆழ்துளை கிணறு எதும் அமைக்கப்படவில்லை எனவும் அறியப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் புல எண்.186/4–ல் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றிற்கு புதிய விவசாய விண்ணப்பம் கோரி மேல்முறையீட்டாளரால் விண்ணப்பம் 13.07.2023 அன்று பதிவு செய்யப்பட்டு 15.07.2023 அன்று கள ஆய்வும் செய்யப்பட்டுள்ளது.

7.10 இவ்வழக்கில் விண்ணப்பம் எண் 3076/2004–ற்கு தயார் நிலை பதிவு செய்ய வேண்டி 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் எண் 16/2021–22 நாள் 13.10.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது. அதாவது தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வெளியிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட விவசாய மின்னிணைப்புகளுக்கான விதிமுறைகள் 30.12.2020 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்புதான் தயார் நிலை அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தை திருத்தப்பட்ட விதிமுறைகளின்படிதான் பரிசீலைணை செய்ய இயலும். திருத்தப்பட்ட விதிமுறைகளின்படி ஒரு கிணற்றுக்கு இலவச மின் இணைப்பு பெற தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதித்தொகுப்பு விதி 29(2) (ஆ) –ல் கூறப்பட்ட விதிமுறைகளை ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"29.மின்னிணைப்புத் தொடர்கள்***
*(2) xxx*
*xxx*

*(ஆ) கிணறுகள் / ஆழ்குழாய்க் கிணறுகள், தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் அமைந்துள்ள நிலையில், ஒவ்வொரு கிணற்றிலிருந்தும்/ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்தும் நீர்பாசனம் செய்ய வேண்டிய நிலத்தின் பரப்பளவு குறைந்தது 0.5 ஏக்கராக இருக்கும் பட்சத்தில், ஒரு நில அளவை புல எண்ணில் அல்லது பிரிக்கப்பட்ட ஒரு புல எண்ணில், ஒரு நபருக்கு ஒவ்வொரு*

*கிணற்றிற்கும்/ஆழ்குழாய் கிணற்றிற்கும் ஒரு வேளாண் மின் இணைப்பு வழங்கலாம்."*

7.11 மேற்கூறிய விதியின் படி ஒரு சர்வே எண்ணில் ஒருவருக்கு ஒரு கிணற்றில் ஒரு மின் இணைப்பு மட்டுமே வழங்க முடியும் என்பது தெரியவருகிறது. இந்த வழக்கில் சர்வே எண். 186/2–ல் அமைந்துள்ள கிணற்றில் மேல்முறையீட்டாளர் மற்றும் அந்த கிணற்றின் கூட்டு உரிமையாளரான திரு மணி ஆகியோர் பெயரில் தனித்தனி மின் இணைப்பு இருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எனவே, மேல்முறையீட்டாளரின் பெயரில் சர்வே எண். 186/2–ல் அமைந்துள்ள கிணற்றில் மின்னிணைப்பு எண்.231–011–160 பயன்படுத்தி வரும் நிலையில் அதே கிணற்றிற்கு மேலும் ஒரு விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் என்ற நிலை ஏற்படுகிறது. மேலும் மேல்முறையீட்டாளரால் புல எண். 186/4–ல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு புதிய விவசாய விண்ணப்பம் கோரி 13.07.2023 அன்று பதிவு செய்யப்பட்டு 15.07.2023 அன்று கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

7.12 எனவே, மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் தற்பொழுது பயன்படுத்தி வரும் புல எண்.182/2–ல் உள்ள மின்னிணைப்பும், திரு விநாயகம் அவர்களின் வாரிசுதாரர்களிடமிருந்து வாங்கிய நிலத்தின் விவசாய மின் இணைப்புக்காக பதிவு செய்யப்பட்ட விண்ணப்பமும் 186/2–இல் உள்ள கிணற்றுக்கே வருவதால் அது பெயர் மாற்றம் செய்யும்பட்சத்தில் திரு ராதாகிருஷ்ணன் பெயரில் 186/2–ல் உள்ள கிணற்றில் ஒருவருக்கே இரண்டு இலவச மின் இணைப்பு என்பதாக கருதும் நிலை ஏற்படுகிறது. எனவே, திரு.விநாயகம் அவர்களால் புல எண்.182/2–ல் பதிவு செய்யப்பட்ட மின் இணைப்பு விண்ணப்பத்தை மற்றுமொரு சர்வே எண் 186/4–ற்கு மின் இணைப்பு இடமாற்றம் கோரும் கோரிக்கை ஏற்படையதல்ல. மேலும், மின்குறைதீர்ப்பாளர் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளர் ஒழுங்குமுறை விதிகள் 2004, விதிகளின் அடிப்படையிலே செயல்பட வேண்டியிருப்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையில் நிவாரணம் வழங்க வழிவகை ஏதும் இல்லை என தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் கோரிக்கையில் சர்வே எண் 186/2 என்ற கிணற்றில் இரண்டு இலவச மின் இணைப்பு பெறப்படும் நிலை

ஏற்படுவதால் அதன் பொருட்டு ஒரு மின் இணைப்பு விண்ணப்பத்தை பெயர் மாற்றம் செய்து மற்றுமொரு சர்வே எண் 186/4–க்கு மின் இணைப்பு கோரும் கோரிக்கை ஏற்புடையதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 57/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1) திரு ராதாகிருஷ்ணன், – By RPAD
த/பெ. ராஜகோபால் கவுண்டர்,
கடுங்காளகுப்பம் கிராமம், வ.புதூர் அஞ்சல்,
கம்மவான்பேட்டை வழி, ஆற்காடு தாலுக்கா,
இராணிப்பேட்டை மாவட்டம் – 632 319.
அலைபேசி: 63004 99833

2) செயற்பொறியாளர்/ இ&ப/ வேலூர்,
வேலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு மெயின் ரோடு, TNEB,
காந்தி ரோடு, வேலூர் – 632 006.

3) மேற்பார்வை பொறியாளர், – By Email
**வேலூர்** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
10வது கிழக்கு மெயின் ரோடு,
காந்தி நகர், வேலூர்–632 006.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6) உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.